# வர்த்தகமும் சுற்றுலாவும்

## பொதுவான வர்த்தக நிலுவை

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம் 1985 இல் சாதகமற்ற தொன்ருக இருந்தது. சிஎஉ நியதிகளில் ஏற்றுமதி வருவாய்கள் 8 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்த வேளேயில் இறக்குமதிகள் மீதான செலவினம் 5 சதவீதத்தினுல் அதிகரித்தது. இதன் விளேவாக வர்த்தகப் பற்ருக்குறை மிகக் கூடியளவில் அதிகரித்தது. இது ஏற்றுமதி வருவாய்கள் 44 சதவீதத்தினுல் அதிகரித்த வேளேயில் இறக்குமதிச் செலவினம் 0.6 சதவீதத்தினுல் மட்டும் சிறிதளவாக அதிகரித்த 1984 ஆம் ஆண்டிற்குப் பெருமளவு மாருனதாகும்.

1985 இல் ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்குத் தேயிலே, இறப்பர் விலேகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு கப்பல்கள், வான்கலங்கள், பாதுகாப்புக் கருவிகள், நுகர்வுப் பொருட்கள், கோதுமைத் தானியம், வளமாக்கி என்பன வற்றின் இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவினத்தில் பிரதிபலிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டிற்கான தற்காலிக சுங்கத் தரவுகளின்படி, இறக்குமதிகள் மீதான செலவினம் ரூ. 490,690 இலட்சங்களாகவும் (சிஎஉ 17,760 இலட்சம்) ஏற்றுமதிகள் ரூ. 350,350 இலட்சங்களாகவும் (சிஎஉ 12,680 இலட்சம்) அமைந்து ரூ. 140,340 இலட்சம் (சிஎஉ 5,080 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்ருக்குறையை விளேவித்தது. இப்பற்ருக்குறை முன்னேய ஆண்டின் ரூ. 99,070 இலட்சத்திலும் பார்க்க (சிஎஉ 3,800 இலட்சம்) சிஎஉ நியதிகளில் 34 சதவீதம் உயர்வானதாக இருந்தது. காலங்கடந்தமை மற்றும் பதிவு செய்தலுடன் தொடர் பான ஏனேய காரணிகளுக்காகச் சுங்கத் தரவுகள் சீராக்கம் செய்யப்பட்ட பொழுது, மொத்த இறக்குமதிகளின் தொகை ரூ. 529,170 இலட்சங்களாக (சிஎஉ 19,150 இலட்சம்) விளங்கிய வேளேயில் மொத்த ஏற்றுமதித் தொகை

அட்டவணே 1.26

**வர்த்தகநிலுவை 1983—1985**

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் (அ) | | ஏற்றுமதிகள் (இ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது |
| 1983 ... | 42,021 (1,670) | 45,558 (1,811) | 25,183 (1,001) | 25,096 (998) | —16,838 (—669) | —20,461 (—813) |
| 1984 ... | 46,913 (1,799) | 47,541 (1,823) | 37,006 (1,419) | 37,347 (1,432) | — 9,907 (—380) | —10,194 (—391) |
| 1985(ஆ) ... | 49,069 (1,776) | 52,917 (1,915) | 35,035 (1,268) | 36,207 (1,311) | —14,034 (—508) | —16,710 (—605) |

(அ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) மீள ஏற்றுமதிகளே உள்ளடக்குகிறது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணேயாளர் திணேக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனேய முக்கிய வளமாக்கி இறக்குமதி யாளர்களும்,
வரையறுக்கப்பட்ட எயர் லங்கா,
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

ரூ. 362,070 இலட்சங்களாகக் (சிஎஉ 13,110 இலட்சம்) காணப்பட்டது. இதன் விளைவாகச் சீராக்கப்பட்ட வர்த்தகப் பற்றுக்குறையான ரூ. 167,100 இலட்சம் (சிஎஉ 6,050 இலட்சம்) முன்னைய ஆண்டின் பற்றுக்குறையான ரூ. 101,940 இலட்சத்(சிஎஉ 3,910 இலட்சம்)தினைவிட சிஎஉ நியதிகளில் 55 சதவீதம் உயர்வானதாக இருந்தது.

ஏற்றுமதிகள், இறக்குமதிகள் இரண்டினதும் விலைகளில் ஏற்பட்ட சாதக மற்ற அசைவுகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்குப் பின்னர் 1985 இல் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத் தில் பாதகமான விளைவினை ஏற்படுத்தின. ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணினுல் அளவிடப்பட்டவாறு ஏற்றுமதி விலைகள் 1984 இன் 31 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 14 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. எதிர்மாறுக இறக்குமதி விலைகள் 1984 ஆம் ஆண்டின் 8 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 ஆம் ஆண்டில் 11 சதவீதத்தினுல் அதிகரித் தது. விலைகளில் ஏற்பட்ட இவை தொடர்பான அசைவுகள் இயற்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் 1984 இல் ஏற்பட்ட 22 சதவீதம் கொண்ட முன்னேற்றத் துடன் ஒப்பிடுகையில் 1985 இல் 23 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை விளைவித்தன.

அட்டவணை 1.27

**வெளிநாட்டு வர்த்தகம் 1979—1985**

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | சுட்டெண்கள் 1981=100 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலைகள் | | வர்த்தக மாற்று வீதங்கள் |
| | ஏற்றுமதிகள் (க. எ. பெ.) | இறக்குமதிகள் (கொ. கா. க.) | வர்த்தக நிலுவை | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்குமதிகள் | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்குமதிகள் | |
| 1979 | 15,273 | 22,560 | – 7,287 | 86 | 85 | 87 | 76 | 116 |
| 1980 | 17,595 | 33,942 | – 16,347 | 90 | 107 | 95 | 90 | 106 |
| 1981 | 21,043 | 36,582 | – 15,539 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1982 | 21,454 | 41,946 | – 20,492 | 105 | 98 | 98 | 107 | 92 |
| 1983 | 25,096 | 45,558 | – 20,461 | 104 | 108 | 126 | 110 | 114 |
| 1984 | 37,347 | 47,541 | – 10,194 | 120 | 109 | 165 | 119 | 139 |
| 1985 (அ) | 36,207 | 52,917 | – 16,710 | 126 | 102 | 141 | 132 | 107 |

(அ) தற்காலிகமானவை.
1980 ஆம் ஆண்டிலிருந்து திருத்தியமைக்கப்பட்டவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

DISCARDED

## ஏற்றுமதிகள்

சீராக்கப்பட்ட தரவுகளின்படி, ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 1984 இன் ரூ. 373,470 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் (சிஎஉ 14,320 இலட்சம்) 1985 இல் ரூ. 362,070 இலட்சங்களாக (சிஎஉ 13,110 இலட்சம்) விளங்கின. இவ்வீழ்ச்சி ரூபாய் நியதிகளில் 3 சதவீதமாகவும் சிஎஉ நியதிகளில் 8 சதவீத மாகவும் விளங்கியது. இதற்கு மாறுக 1984 ஆம் ஆண்டில் இவ்வதிகரிப்புக்கள் முறையே 49 சதவீதமாகவும், 43 சதவீதமாகவும் காணப்பட்டன. 1985 இல்

ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1984 இன் ரூ. 225,750 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 8,660 இலட்சம்) 1985 இல் ரூ. 190,260 இலட்சங்களுக்கு (சிஎஉ 6,890 இலட்சம்) குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக மொத்த ஏற்றுமதிகளில் வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு 1984 இன் 60 சதவீதத்திலிருந்து 1985 இல் 52 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 9,230 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 350 இலட்சம்), ரூ. 11,770 இலட்சங்களுக்கு (சிஎஉ 430 இலட்சம்) 27 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 20 சதவீதம்) அதிகரித்த வேளையில் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 9 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 3 சதவீதத்தால்) ரூ. 128,150 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 4,910 இலட்சம்), ரூ. 139,800 இலட்சங்களுக்கு (சிஎஉ 5,060 இலட்சம்) அதிகரித்தன. வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு வீழ்ச்சியடைந்தமையின் முக்கிய காரணமாக ஏற்றுமதிகளில் கைத்தொழில் பொருள் ஏற்றுமதியின் பங்கு 1984 இன் 34 சதவீதத்திலிருந்து 1985 இல் 39 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1985 இல் வேளாண்மை ஏற்றுமதிகள் 16 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. தெங்கு உற்பத்தி தவிர்ந்த அனைத்து முதன்மை வேளாண்மை ஏற்றுமதிகளிலுமிருந்தான வருவாய்கள் 1985 இல் வீழ்ச்சியடைந்தன. தேயிலை ஏற்றுமதிகள் 24 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 28 சதவீதம்) வீழ்ச்சியடைந்த வேளையில் இறப்பர் மற்றும் சிறு வேளாண்மைப் பயிர்கள் முறையே 22 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 27 சதவீதம்) 2 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 7 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன. இக் குறைந்த வருவாய்களுக்கு ஏற்றுமதிகளின் விலைகள், அளவுகள் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். எனினும், தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதி அளவுகள் 186 சதவீதத்தினுல் அதிகரித்தமையின் காரணமாகத் தெங்கு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 46 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 38 சதவீதம்) கணிசமாக அதிகரித்தன. இவ்வதிகரிப்பு விலைகளில் ஏற்பட்ட கூடியளவு வீழ்ச்சியினைப் பெருமளவுக்கு எதிரீடு செய்தது.

1985 இல் கைத்தொழில் பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 1984 இன் 40 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 3 சதவீதத்தினுல் சிறிதளவால் அதிகரித்துக் காணப்பட்டது. இதற்கு முதன்மைக் கைத்தொழில் ஏற்றுமதியான ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே பெருமளவு காரணமாகும். ஏனைய கைத்தொழில் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 4 சதவீதத்தினுல் சிறிதளவாக அதிகரித்தன. எனினும் பெற்ருேலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 32,880 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,260 இலட்சம்), ரூ. 38,760 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,400 இலட்சம்) 18 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 11 சதவீதம்) அதிகரித்தது.

# அட்டவணை 1.28

## ஏற்றுமதிகளின் அமைப்பு

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1985(ஈ) | 1983 | 1984 | 1985 | 1983 | 1984 | 1985 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் ... | 14,554 | 22,575 | 19,026 | 579 | 866 | 689 | 58.0 | 60.4 | 52.5 |
| 1.1 தேயிலை ... | 8,295 | 15,764 | 12,003 | 330 | 605 | 434 | 33.1 | 42.2 | 33.2 |
| 1.2 இறப்பர் ... | 2,852 | 3,301 | 2,566 | 114 | 127 | 93 | 11.4 | 8.8 | 7.1 |
| 1.3 தெங்கு .. | 1,921 | 2,118 | 3,093 | 76 | 81 | 112 | 7.6 | 5.7 | 8.5 |
| 1.3.1 உள்ளீட்டுஉற்பத்திகள் ... | 1,409 | 1,553 | 2,383 | 56 | 60 | 86 | 5.6 | 4.2 | 6.6 |
| 1.3.2 ஏனையவை ... | 512 | 566 | 710 | 20 | 22 | 26 | 2.0 | 1.5 | 2.0 |
| 1.4 சிறு வேளாண்மை உற்பத்திகள் (அ) ... | 1,486 | 1,391 | 1,365 | 59 | 53 | 49 | 5.9 | 3.7 | 3.8 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) (ஆ) ... | 8,821 | 12,815 | 13,980 | 351 | 491 | 506 | 35.1 | 34.3 | 38.6 |
| 2.1 புடவையும் ஆடைகளும் ... | 4,738 | 7,535 | 7,899 | 188 | 289 | 286 | 18.9 | 20.2 | 21.8 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் ... | 2,682 | 3,288 | 3,877 | 107 | 126 | 140 | 10.7 | 8.8 | 10.7 |
| 2.3 ஏனையவை ... | 1,401 | 1,993 | 2,204 | 56 | 76 | 80 | 5.6 | 5.3 | 6.1 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் ... | 1,132 | 923 | 1,177 | 45 | 35 | 43 | 4.5 | 2.5 | 3.2 |
| 3.1 இரத்தினக் கற்கள் (ஊ) ... | 940 | 706 | 874 | 37 | 27 | 32 | 3.7 | 1.9 | 2.4 |
| 3.2 ஏனையவை ... | 192 | 217 | 303 | 8 | 8 | 11 | 0.8 | 0.6 | 0.8 |
| 4. பகுக்கப்படாதவைகள் (இ) ... | 589 | 1,033 (உ) | 2,024 (உ) | 23 | 40 | 73 | 2.3 | 2.8 | 5.6 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ) ... | 25,096 | 37,347 | 36,207 | 998 | 1,432 | 1,311 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள்.
(ஆ) சீராக்கப்பட்டவை.
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.
(ஈ) தற்காலிகமானவை.
(உ) வான்கலன் ஒன்றின் ஏற்றுமதி உட்பட.
(ஊ) வைரங்கள் உட்பட.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்.

மாற்றல்— 1983 — 1 சிஎஉ = ரூ. 25.16
1984 — 1 சிஎஉ = ரூ. 26.08
1985 — 1 சிஎஉ = ரூ. 27.63

தேயிலை உற்பத்தியில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டபோதும் ஏற்றுமதி களின் அளவு 1984 இன் 2,040 இலட்சம் கிலோக்கிறும்களிலிருந்து 1985 இல் 1,980 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு வீழ்ச்சியடைந்தது. சராசரி கஏபெ விலை களும் 1984 இன் கிலோவொன்றிற்கான ரூ. 77.20 இலிருந்து (சிஎஉ 2.96) 1985 இல் ரூ. 60.62 (சிஎஉ 2.19) இற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக வருவாய்கள் 24 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 28 சதவீதம்) வீழ்ச்சி யடைந்தது. தேயிலையின் பன்னாட்டு விலை வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கொழும்பு ஏல விலை 1984 இல் கிலோவொன்றிற்கு ரூ. 62.79 இலிருந்து கிலோவொன்றிற்கு ரூ. 39.01 இற்கு 38 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலையின் அளவு 1984 இன் 2,040 இலட்சம் கிலோக்கிறும்களிலிருந்து 1985 இல் 1980 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை இலண்டன் ஏலங்களில் கிலோக்கிறுமொன்றிற் கான இலங்கைத் தேயிலையின் விலை 247.41 பென்சுகளிலிருந்து கிலோவொன் றிற்கு 158.86 பென்சுகளுக்கு 36 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இலண்டன் ஏலங்களில் வழங்கப்பட்ட இலங்கைத் தேயிலையின் அளவு 26 இலட்சம் கிலோக் கிறும்களிலிருந்து 28 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு அதிகரித்தது.

இறப்பர் உற்பத்தி சிறிதளவாக அதிகரித்தபோதும் இறப்பர் ஏற்றுமதிகள் 1984 இன் 1,260 இலட்சம் கிலோக்கிறும்களிலிருந்து 1985 இல் 1,200 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு வீழ்ச்சியடைந்தது. கஏபெ விலை கிலோக்கிறுமொன்றிற்கு ரூ. 26.16 இலிருந்து ரூ. 21.34 இற்கு 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 33,010 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,270 இலட்சம்) ரூ. 25,660 இலட்சங்களுக்கு (சிஎஉ 930 இலட்சம்) 22 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 27 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது.

அனைத்து தெங்கு உற்பத்திகளினதும் ஏற்றுமதிப் பெறுமதி 1985 இல் 46 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 38 சதவீதம்) அதிகரித்தது. முன்னைய ஆண்டின் ரூ. 21,180 இலட்சங்களுடன் (சிஎஉ 810 இலட்சம்) ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 30,930 இலட்சங்களாக (சிஎஉ 1,120 இலட்சம்) காணப்பட்டது. உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் 1984 இன் ரூ. 15,530 இலட்சங் களிலிருந்து (சிஎஉ 590 இலட்சம்) 1985 இல் 23,830 இலட்சங்களுக்கு (சிஎஉ 860 இலட்சம்) 53 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 45 சதவீதம்) அதிகரித்தது. உள்ளீட்டு உற்பத்திகளின் அதிகரித்த வருவாய்களுக்கு ஏற்றுமதிகளின் அளவு 1984 இன் 3,270 இலட்சம் காய்களிலிருந்து 1985 இல் 9,350 இலட்சங்களுக்கு மிகக் கூடியளவில் அதிகரித்தமையே முழுக் காரணமாகும். தெங்குத் துணை உற்பத்திகளின் ஏற்றுமதிப் பெறுமதியும் ரூ. 5,660 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 220 இலட்சம்), ரூ. 7,100 இலட்சங்களுக்கு (சிஎஉ 260 இலட்சம்) 25 சத வீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 18 சதவீதம்) உயர்வடைந்தது.

இவ்வாண்டின் தெங்கு ஏற்றுமதிகளின் அளவு 12,480 இலட்சங் காய் களுக்குச் சமமான தொகை ஏற்றுமதி செய்யப்பட்டமையே 1972 இற்குப் பின்னர் ஏற்பட்ட மிக உயர்ந்த தொகையாக இருந்தது. எனினும், ஏற்றுமதி செய்யப்பட்ட உள்ளீட்டு உற்பத்திகளுக்குச் சமமான காய்களின் கஏபெ விலை 1984 இன் ரூ. 4.75 இலிருந்து 1985 இல் ரூ. 2.54 இற்கு 46 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1983 ஆம் ஆண்டிலும், 1984 ஆம் ஆண்டிலும் முறையே 9 சதவீதத்திலும், 10 சதவீதத்திலும் வீழ்ச்சியடைந்த சிறு வேளாண்மைப் பயிர்களின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 1985 இல் மேலும் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சி முக்கியமாகக் கராம்பு, மரக்கறிகள், பாக்கு, தயாரிக்கப்படாத புகையிலை, வெற்றிலை, எண்ணெய் விதைகள், பழவகை ஆகிய வற்றிலிருந்தான குறைந்த வருவாயின் காரணமாக ஏற்பட்டதாகும்.

கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதி 1984 இன் ரூ. 128,150 இலட்சங்களுடன் (சிஎஉ 4,910 இலட்சம்) ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 139,800 இலட்சங்களுக்கு (சிஎஉ 5,060 இலட்சம்) அதிகரித்தது. புடவைகள் ஆடைகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 1984 இன் ரூ. 75,350 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 2,890 இலட்சம்) 1985 இல் ரூ. 78,990 இலட்சங்களுக்கு (சிஎஉ 2,860 இலட்சம்) சிஎஉ நியதிகளில் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏனைய கைத்தொழில் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 19,930 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 760 இலட்சம்) ரூ. 22,040 இலட்சங்களுக்கு (சிஎஉ 800 இலட்சம்) 11 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 4 சதவீதம்) அதிகரித்தது. எனினும், இவ்வேற்றுமதிகளில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சி 1984 இல் ரூ. 32,880 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,260 இலட்சம்) 1985 இல் ரூ. 38,760 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,400 இலட்சம்) 18 சதவீதத்தினால் அதிகரித்த (சிஎஉ நியதிகளில் 11 சதவீதம்) பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி அதிகரிப்பினால் ஈடுசெய்யப்பட்டது.

ஆடை ஏற்றுமதிகள் முக்கியமானதொன்றாக மாறியதன் பின்னர் தொடர்ச்சியாக அதிகரித்த ஆடை ஏற்றுமதிகளின் பெறுமதி சிஎஉ நியதிகளில் முதற்றடவையாக வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் இதன் பங்கு 1984 இன் 20 சதவீதத்திலிருந்து 1985 இல் 22 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினது தொழில் முயற்சிகளின் ஆடை ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டின் ரூ. 26,870 இலட்சத்துடன் (சிஎஉ 1,030 இலட்சம்) ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 29,010 இலட்சங்கள் (சிஎஉ 1,050 இலட்சம்) என மதிப்பிடப்பட்டுள்ளது.

1985 இல் சிறு வேளாண்மை ஏற்றுமதிகளும் இரத்தினக் கற்களும் தொடர்ந்து மேலும் வீழ்ச்சியடைந்த வேளையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிதளவு அதிகரிப்பினை மட்டும் காட்டியது.

**இறக்குமதிகள்**

இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவினம் 1984 இன் ரூ. 475,410 இலட்சங்களுடன் (சிஎஉ 18,230 இலட்சம்) ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 529,710 இலட்சங்களாக (சீராக்கப்பட்ட தரவு) (சிஎஉ 19,150 இலட்சம்) விளங்கியது. இது ரூபா நியதிகளில் 11 சதவீதமும், சிஎஉ நியதிகளில் 5 சதவீதமும் கொண்டதொரு அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பிற்கு நுகர்வுப் பொருட்கள், கப்பல்கள், வான்கலங்கள், பாதுகாப்புக் கருவிகள், கோதுமைத் தானியம், வளமாக்கி என்பனவற்றின் அதிகரித்த இறக்குமதிகளே பெருமளவுக்குக் காரணமாகும்.

## அட்டவணை 1.29

### இறக்குமதிகளில் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | கஎஉ பத்து இலட்சம் | | | மொத்த சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984(அ) | 1985(ஆ) | 1983 | 1984 | 1985 | 1983 | 1984 | 1985 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 11,639 | 11,052 | 14,261 | 462.7 | 423.8 | 516.2 | 25.5 | 23.2 | 27.0 |
| 1.1 உணவும் குடிபானமும் ... | 5,375 | 4,986 | 5,908 | 213.7 | 191.2 | 213.8 | 11.8 | 10.5 | 11.2 |
| 1.1.1 அரிசி ... | 765 | 197 | 1,089 | 30.4 | 7.5 | 39.4 | 1.7 | 0.4 | 2.1 |
| 1.1.2 மா ... | 108 | 28 | 206 | 4.3 | 1.1 | 7.5 | 0.2 | 0.1 | 0.4 |
| 1.1.3 சீனி ... | 1,985 | 1,346 | 1,985 | 78.9 | 51.6 | 71.8 | 4.4 | 2.8 | 3.7 |
| 1.2 புடவையும் துணிகளும் ... | 2,724 | 2,974 | 3,799 | 108.3 | 114.0 | 137.5 | 6.0 | 6.2 | 7.2 |
| 1.3 ஏனையவை ... | 3,540 | 3,092 | 4,556 | 140.7 | 118.6 | 164.9 | 7.8 | 6.5 | 8.6 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 21,727 | 23,749 | 25,532 | 863.7 | 910.7 | 924.2 | 47.7 | 50.0 | 48.2 |
| 2.1 பெற்றோலியம் ... | 11,024 | 10,681 | 10,986 | 438.2 | 409.6 | 397.6 | 24.2 | 22.5 | 20.8 |
| 2.2 வளமாக்கி ... | 625 | 1,103 | 1,579 | 24.8 | 42.3 | 57.2 | 1.4 | 2.3 | 3.0 |
| 2.3 இரசாயனம் ... | 832 | 1,028 | 902 | 33.1 | 39.4 | 32.6 | 1.8 | 2.2 | 1.7 |
| 2.4 கோதுமை ... | 2,340 | 2,471 | 2,765 | 93.0 | 94.8 | 100.1 | 5.1 | 5.2 | 5.2 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 12,077 | 12,170 | 10,387 | 480.1 | 466.7 | 376.0 | 26.5 | 25.6 | 19.6 |
| 3.1 பொறியும் கருவியும் ... | 5,261 | 5,335 | 4,769 | 209.1 | 204.6 | 172.6 | 11.6 | 11.2 | 9.0 |
| 3.2 போக்குவரத்துக் கருவி (இ) ... | 3,826 | 3,031 | 2,499 | 152.1 | 116.2 | 90.5 | 8.4 | 6.4 | 4.7 |
| 3.3 கட்டடப் பொருட்கள் ... | 1,177 | 727 | 899 | 46.8 | 27.9 | 32.5 | 2.6 | 1.5 | 1.7 |
| 4. பகுக்கப்படாதவை ... | 115 | 570 | 2,737 | 4.6 | 21.8 | 99.0 | 0.3 | 1.2 | 5.2 |
| மொத்த இறக்குமதிகள் (ஈ) ... | 45,558 | 47,541 | 52,917 | 1,811.1 | 1,823.0 | 1,915.4 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) திருத்தப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சுங்கச் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிராத வான்கலன்கள், கப்பல்களின் பெறுமதியை உள்ளடக்குகிறது.
(ஈ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்,
ஏனைய முதன்மை இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட எயர் லங்கா
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

இறக்குமதிகளின் உள்ளமைப்பு 1985 இல் குறிப்பிடத்தக்களவில் மாற்றம் அடைந்தது. நுகர்வுப் பொருட்களின் பங்கு 23 சதவீதத்திலிருந்து 27 சத வீதத்திற்கு அதிகரித்த வேளையில் முதலீட்டுப் பொருட்களின் பங்கு 26 சத வீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் இடைநிலைப் பொருட்களின் பங்கு 50 சதவீதத்திலிருந்து 48 சதவீதத்திற்குச் சிறிதளவால் மாற்றமடைந்தது. அரிசி, சீனி, மா, புடவைகள், உந்து ஊர்திகள், உந்து ஈருருளிகள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவு நுகர்வுப் பொருட்களின் அதிகரிப்புக்குப் பொறுப்பாக இருந்தது.

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 1985 இல் ரூ. 103,870 இலட்சங்களாக (சிஎஉ 3,760 இலட்சம்) விளங்கியது. சிஎஉ நியதிகளில் இது முன்னைய ஆண்டினைவிட 19 சதவீதம் குறைவானதாகும். கப்பல்கள், வான்கலங்களின் இறக்குமதியைத் தவிர்க்கும்பொழுது முதலீட்டுப் பொருட்களின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரிதாகும். சிஎஉ நியதிகளில் முதலீட்டு இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முன்னைய ஆண்டினைவிடப் போக்குவரத்துக் கருவிகள் (22 சதவீதம்) பொறித்தொகுதியும் கருவிகளும் (16 சதவீதம்) ஆகியவற்றின் குறைந்த அளவு இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். எனினும் 1984 இல் 40 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்த கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள் 1985 இல் 16 சதவீதத்தினுல் அதிகரித்தன.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 1984 இன் ரூ. 237,490 இலட்சங்களுடன் (சிஎஉ 9,110 இலட்சம்) ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 255,320 இலட்சங்களாக (சிஎஉ 9,240 இலட்சம்) விளங்கி 8 சதவீதம் கொண்ட (சிஎஉ நியதிகளில் 2 சதவீதம்) அதிகரிப்பினைக் காட்டியது. எனினும் கோதுமைத் தானியத்தின் மீதான இறக்குமதிச் செலவினம் 12 சதவீதத்தினுல் அதிகரித்த வேளையில் (சிஎஉ நியதிகளில் 6 சதவீதம்) வளமாக்கி மீதான இறக்குமதிச் செலவினம் 43 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 35 சதவீதம்) உயர்வடைந்தது. முன்னைய ஆண்டில் 24 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 19 சத வீதம்) அதிகரித்த இரசாயன மூலங்கள், கலவைகளினது இறக்குமதி 1985 இல் 12 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 17 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. 1984 இல் ரூபா நியதிகளில் 3 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 7 சதவீதம்) வீழ்ச்சியடைந்த பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவு 1985 இல் சிஎஉ நியதிகளில் மேலும் 3 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. எனினும் ரூபா நியதிகளில் இது 3 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியது. மொத்த இடைநிலைப் பொருட்களில் பெற்றோலியத்தின் பங்கு முன்னைய ஆண்டினைவிடச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்குப் பன்னுட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.

1984 இல் 5 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 8 சதவீதம்) வீழ்ச்சியடைந்த நுகர்வுப் பொருட்களின் மீதான மொத்த இறக்குமதிச் செலவு 1985 இல் 29 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 22 சதவீதம்) கூடியளவில் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு நுகர்வுப் பொருட்களின் அனைத்து வகைகளிலும் அதாவது உணவும் குடிபானமும், புடவையும் துணிகளும், ஏனைய நுகர்வுப் பொருட்களிலும் பிரதிபலித்தது. இவை சிஎஉ நியதிகளில் முன்னைய ஆண்டினைவிட முறையே 12 சத

அட்டவணை 1.30

## முக்கிய இறக்குமதிகளின் அளவு 1985

மெற்றிக் தொன்கள்

| மாதம் | | அரிசி | கோதுமை | சீனி | பெற்ரோலியம் (மசகு எண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | ... | 45 | 68,964 | 25,600 | 29,816 | 20,970 |
| பெப்புருவரி | ... | 23,946 | 85,764 | 31,463 | 31,823 | 20,260 |
| மாச்சு | ... | 20,126 | 35,069 | 33,300 | 237,591 | 18,380 |
| எப்பிறல் | ... | 20,227 | 52,500 | 45,079 | 157,201 | 33,215 |
| மே | ... | 18,344 | 52,500 | 36,000 | 170,648 | 28,339 |
| யூன் | ... | 6,860 | 52,500 | 16,420 | 124,424 | 32,387 |
| யூலை | ... | 27,265 | 68,330 | 18,500 | 154,748 | 40,677 |
| ஓகத்து | ... | 20,077 | 51,618 | 770 | 63,911 | 42,213 |
| செத்தெம்பர் | ... | 20,525 | 35,945 | 25,332 | 187,224 | 28,600 |
| ஒத்ரோபர் | ... | 14,907 | 58,512 | 19,223 | 186,117 | 94,817 |
| நவெம்பர் | ... | 10,002 | — | 68,494 | 158,287 | 42,907 |
| திசெம்பர் | ... | 29,044 | 103,444 | 67,448 | 155,679 | 31,100 |
| மொத்தம் (அ) (ஆ) | ... | 211,367 | 665,146 | 387,621 | 1,657,469 | 433,865 |

(அ) சீராக்கப்பட்டது,
(ஆ) பிற்பட்ட சுங்கச் சீராக்கங்களின் காரணமாக மாதாந்த தரவுகள் ஆண்டு மொத்தத்திற்கு சேர்க்கப்படுவதில்லை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

வீதத்தினுலும், 21 சதவீதத்தினுலும், 39 சதவீதத்தினுலும் அதிகரித்தன. உணவும் குடிபானமும் வகையில் அரிசி இறக்குமதி மீதான செலவினம் ரூ. 1,970 இலட்சமாகவிருந்து (சிஎஉ 75 இலட்சம்) ரூ. 10,890 இலட்சங்களுக்கு (சிஎஉ 390 இலட்சம்) நான்கு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்த வேளையில் சீனி இறக்குமதி 48 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 39 சதவீதம்) உயர்வடைந்தது. ஏனைய நுகர்வுப் பொருள் வகையில் உந்து ஊர்திகள், ஈருருளிகள் ஆகியவற்றின் இறக்குமதிகள் குறிப்பிடத் தக்களவில் அதிகரித்த வேளையில் வானெலி, தொலைக் காட்சிப் பெட்டிகளின் இறக்குமதி சிஎஉ நியதிகளில் 18 சதவீதத்தால் அதிகரித்தது.

### வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

1977 நவெம்பரில் ஏற்படுத்தப்பட்ட தாராளமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கைகள் அவற்றின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கான திருத்தங்களுடன் 1985 ஆம் ஆண்டுப் பகுதியிலும் தொடர்ந்திருந்தன. குறிப்பாகப் புடவை இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. உள்நாட்டில் அதிகரித்த உற்பத்தியினைக் கொண்டிருந்த உணவுப் பண்டங்களுக்காகத் தெரிந்தெடுத்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இருந்தன. சில ஏற்றுமதிகளைப் பொறு

த்தவரை அவற்றின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுமதி உரிமங்கள் வேண்டப்பட்டன. குறைந்தளவு ஏற்றுமதி விலைகளை எதிர்நோக்கிய உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டுத் தேயிலை, தெங்கு ஆகியவற்றின் ஏற்றுமதித் தீர்வைகளும் குறைக்கப்பட்டன.

செயற்கைப் புடவைகளுக்கு கொ.கா.க. பெறுமதியில் 100 சதவீதம் அல்லது சதுர மீற்றருக்கு ரூ. 40 உம் பருத்திப் புடவைகளுக்கு கொ.கா.க. பெறுமதியில் 100 சதவீதம் அல்லது சதுரமீற்றருக்கு ரூ. 25 உம் கொண்ட தீர்வை விதிக்கப்பட்டதுடன் அவற்றின் மீதான கடுமையான அளவுக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. உள்நாட்டுப் புடவைக் கைத்தொழிலைப் பாதுகாப்பதே புடவை மீதான தடையின் குறிக்கோளாக இருந்தது. ஆனால் கணிசமான கள்ளக்கடத்தலும் ஏற்றுமதித் தயாரிப்பாளர்களிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள் வெளிச் சந்தைக்குச் சென்றமையும் இக்குறிக்கோளினை அழித்து விட்டன. புடவை இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டதன் விளைவாக உரிமக் கட்டுப்பாட்டின்கீழ்ச் சில பொருட்கள் மட்டுமே எஞ்சியிருந்தன.

செத்தல் மிளகாய், உருளைக்கிழங்கு, வெங்காயம், தக்காளி, உள்ளிப்பூடு, பால் உணவுகள், அரிசி, உப்பிட்டதும் மற்றும் கருவாடு வகை போன்ற உணவு விடயங்களின் உள்நாட்டு உற்பத்தி உள்ளூர்க் கேள்வியை ஈடுசெய்யக் குறிப்பிடத்தக்களவுக்குப் போதுமானதாக இருந்தமையினால் அவற்றின் இறக்குமதிகள் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இவ்விடயங்களின் கட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் மிகையான இறக்குமதிகள் உள்நாட்டுச் சந்தையின் விலை மட்டங்களில் குறைப்புக்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகளைத் தவிர்ப்பதற்கு அதிகாரிகளுக்கு உதவியது.

இறக்குமதிகளைப் போன்றே, பல உற்பத்திகளினது ஏற்றுமதிகளும் தொடர்ந்தும் உரிமத் தேவைகளின்கீழ் இருந்தன. மர, மர உற்பத்திகள், விலங்குகளின் பதனிட்ட, பதனிடப்படாத தோல்கள், யானைத் தந்தம், யானைத் தந்த உற்பத்திகள், கனிப்பொருள், கனிப்பொருள் மணல் மற்றும் உலோகக் கலவைகள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள், ஏற்றுமதி உற்பத்திகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும், குறுகியகால ஏற்றுமதிக் கொள்கைகளினால் இயற்கை மூலவளங்கள் அழிக்கப்படாமையை உறுதிப்படுத்துவதற்குமாக உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. மீன் உற்பத்திகள், கறுவா, மரக்கறிகள், முந்திரிப் பருப்புப் போன்ற இன்னோரன்ன ஏற்றுமதிகளைப் பொறுத்தவரை ஏற்றுமதி உற்பத்திகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு உரிமங்கள் வேண்டப்பட்டன. இதே போன்று கோதுமைத் தானியம் அரிசி, மருந்தாக்கற் பொருட்கள், கழிவுத் தாள்களும் அட்டைகளும், விலங்குத்தீன், உலோகமும் கழிவு உலோகமும் ஆகியவற்றின் ஏற்றுமதிகளுக்கும் இவற்றின் ஏற்றுமதிகள் உள்நாட்டுச் சந்தையில் பற்றுக்குறையினை அல்லது உள்ளூர்க் கைத்தொழிலுக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்தவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டுத் தொடர்பான அதிகாரிகளிடமிருந்தான உரிமங்கள் வேண்டப்பட்டன.

பயனுள்ள பாதுகாப்பு மட்டத்தினை ஒழுங்குபடுத்துவதனை நோக்கமாகக் கொண்ட 1984 இன் அனைத்தையும் உள்ளடக்கிய தீர்வைச் சீராக்கங்கள் 1985 ஆம் ஆண்டு முழுவதும் தொழிற்பாட்டிலிருந்தன. குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டவாறு இச்சீராக்கங்களின் குறிக்கோள் உள்நாட்டு மூலவளங்களின் சிறந்த பயன்பாட்டினை அடைவதாகவே இருந்தது.

கடந்த அண்மைக் காலத்தில் வரிச் சலுகைகள், இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி, சலுகை நிதியிடல் மற்றும் ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி போன்ற இன்னேரன்ன பல ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டபோதும் மரபுவழி யற்ற ஏற்றுமதித்துறையின் செயலாற்றம் மிக உற்சாகமளிப்பதாகவில்லை. 1985 இல் ஏற்றுமதிச் செயலாற்றம் பெற்றோலிய உற்பத்திகளிலும் சில கைத்தொழில் பொருட்களிலுமே தொடர்ந்தும் காணப்பட்டது. சிறு வேளாண்மை உற்பத்திகள், இரத்தினக்கல் ஏற்றுமதிகள், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பல கைத்தொழில்கள் போன்ற துறைகளின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. 1985 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தொழிற்பாட்டிற்கு வந்த வட்டி வீதக் குறைப்பும் கூடியளவிற்கு நம்பகத் தன்மைவாய்ந்த செலாவணி வீதங்களும் இத்துறை மீண்டும் வலிமை பெறுவதற்குச் சில தூண்டுதல்களை வழங்கின. எனினும் இம்மாற்றங்களின் பயன்களைக் கணிப்பது உரிய காலத்திற்கு முற்பட்ட செயலேயாகும்.

ஏற்றுமதிப் பண்டங்களின் குறிப்பாகத் தேயிலை விலைகளில் ஏற்பட்ட கடுமை யான வீழ்ச்சியின் பாதகமான தாக்கத்தினை எதிரீடு செய்வதற்கு ஏற்றுமதிப் பண்டங்களின் மீதான தீர்வையைச் சீராக்குவது அவசியமானதாக மாறியுள்ளது. தேயிலை விலைகள் 1985 ஏப்பிறலின் பின்னர் மிகக் கூடியளவில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. ஏற்றுமதியாளர்களுக்கான நிவாரண வழிமுறையாக அனைத்து வகைத் தேயிலைகளின் மீதான தீர்வை குறைக்கப்பட்டது. இதுகாலவரை தொழிற் பாட்டிலிருந்து வந்த கிலோவொன்றிற்கு ரூ. 1.50 இலிருந்து ரூ. 12.50 வரையான வீச்சினைக் கொண்ட தீர்வை வீதங்கள் 50 சதத்திலிருந்து ரூ. 10.00 வரையான வீச்சுக்குக் குறைக்கப்பட்டது. மேலும் பெறுமான விகித வரிக்கான தொடக்கநிலை கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 32.00 இலிருந்து ரூ. 40.00 இற்கு அதிகரிக்கப்பட்ட துடன் ரூ. 40.00 இற்குக் கூடுதலாகப் பெறப்பட்ட விலைகளின் 50 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட்டது. இம்மாற்றங்களுடன் பெறுமான விகிதத் தீர்வைத் தள்ளு படித் திட்டம் நீக்கப்பட்டது. தேங்காய்த்துருவல், உண்ணத்தக்க உலர்த்திய தேங்காய் என்பனவற்றின் மீதான ஏற்றுமதித் தீர்வை மெற்றிக் தொன்னென் றுக்கு ரூ. 2,500 இனுல் குறைக்கப்பட்டவேளையில் காரீயத்தின் மீதான ஏற்றுமதித் தீர்வை 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. காரீயத்தின் மீதான தீர்வைத் திருத்தம் அதன் போட்டித் தன்மையினை உயர்த்துவதற்காகக் காரீயத்தின் ஏற்றுமதி விலைகளைக் குறைப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மூன்று முதன்மை ஏற்றுமதிப் பண்டங் களுக்கான சமநிலைப்படுத்தும் நிதியம் 1985 இல் அறிவிக்கப்பட்டது. உயர்ந்த விலைகள் கிடைக்கும் நேரங்களில் மிகையான வருமானத்தை ஈர்த்துக் கொள்வதன் மூலமும் விலை குறைந்த நேரங்களில் விலை ஆதரவினை வழங்குவதன் மூலமும் உற்பத்தியாளர் வருவாயினை நிலைப்படுத்துவதே இந்நிதியத்தின் குறிக்கோளாகும். இந்நடவடிக்கைகள் வரவு செலவுத் திட்டத்தை நிலைப்படுத்த உதவும். இது பொருளாதாரக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளினுல் ஏற்படும் இக் கூடியளவு தளம்பல்களின் முழுமையான தாக்கத்தைக் குறைக்கக்கூடியதாக இருக் கும்.

1985 ஒத்தோபரில் முடிவுறும் என எதிர்பார்க்கப்பட்ட பன்னுட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை 1987 ஒத்தோபர் வரைக்கும் மேலும் இரு ஆண்டுகளினுல் நீடிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையில் இலங்கை ஏழு ஏற்றுமதி அங்கத்துவ நாடுகளில் ஒன்ருகும்.

**உள்நாட்டு வர்த்தகம்**

1977 இல் ஏற்படுத்தப்பட்ட தாராளமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கைக்கு இணங்க உள்நாட்டு வர்த்தகக் கொள்கை சந்தை விலைகளின் கட்டுப்பாடற்ற தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துகின்றமையை நோக்கமாகக் கொண்டிருந்தது. எனவே சிறந்த போட்டியை வளர்த்தல், திறந்த சந்தையில் போட்டி விலைகளில் இன்றியமையாத பண்டங்களைக் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றின் பொருட்டு அரசின் தலையீடுகள் ஆகக் குறைந்த மட்டத்தில் பேணப்பட்டன. எனினும் ஏற்றுக்கொள்ளத்தகாத வர்த்தக நடைமுறைகளைத் தவிர்ப்பதற்காகச் சில வகையான நிறுவன ரீதியான ஒழுங்குமுறை அமைப்புத் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருக்கும். இவ்வொழுங்குமுறை அமைப்பு உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தினுல் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம், நிறுத்தலளவை, முகத்தலளவைக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் ஊடாக நிருவகிக்கப்பட்டது.

முன்னைய ஆண்டுகளைப்போன்றே ''மகாபொல வர்த்தகச் சந்தைகள்'' மற்றும் நுகர்வோர் அமைப்புக்களினூடாக நுகர்வோர் அறிவினை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. 1985 காலப்பகுதியில் 18 மகாபொல வர்த்தகச் சந்தைகள் நடத்தப்பட்டவேளையில் 3,544 நுகர்வோர் அமைப்புக்கள் நிறுவப்பட்டன.

தேசிய விலைகள் ஆணைக்குழு, நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகிய இருவரினதும் நலன்களைக் கவனத்திற் கொண்டு அதன் விலைக் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் இக்குழு முன்னைய ஆண்டின் 76 விலை மீளாய்வுகளுடன் ஒப்பிடுகையில் 58 விலை மீளாய்வுகளை மேற்கொண்டது. 1985 இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்ட வரைவு தற்போதைய விலை ஆணைக்குழுவிற்குப் பதிலாகச் நியாய வர்த்தக ஆணைக்குழுவை நிறுவுவதற்கான அதிகாரத்தை வழங்கும். நியாய வர்த்தக ஆணைக்குழு தேசிய விலைக் கொள்கையொன்றை அமைத்து நடைமுறைப் படுத்துவதுடன் மட்டுமன்றித் தனியுரிமை, கலப்படம் மற்றும் போட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கையாளுவதற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.

அரசதுறை வர்த்தக அமைப்புக்கள் தனியார்துறையுடன் கூடியளவில் போட்டியிடவும் வர்த்தக ரீதியில் ஆற்றலுள்ளனவாக விளங்கவும் வேண்டி அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் பன்முகப்படுத்தின. எனினும் அவற்றின் பல தொடர்ந்தும் குறைந்தளவு விற்பனையையே 1985 இல் பதிவு செய்தன. எனினும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இதற்கு விதிவிலக்கானதாக இருந்தது.இது அதன் மொத்த விற்பனையை அதிகரித்ததுடன், தாங்கிருப்புக்களைத் தொழிற்படுத்தியதன் மூலம் நுகர்வோர் விலைகளின் உறுதிப்பாட்டினையும் இன்றியமையாத பண்டங்களின் பகிர்ந்தளிப்புக்களைப் பேணுவதிலும் முக்கிய பங்காற்றியது.

உள்நாட்டு வர்த்தகத்தில் கூட்டுறவு நிலையங்களின் நோக்கம் அரிசி, மா, சீனி மற்றும் உணவு முத்திரைத் திட்டத்தின் கீழான ஏனைய நுகர்வுப் பொருட்கள் போன்ற அடிப்படை உணவு விடயங்களின் பகிர்ந்தளிப்புக்களுக்கு முக்கியமாக மட்டுப்படுத்தப்பட்டது. எவ்வாறுயினும் கூட்டுறவு நிலையங்களின் பங்கு 1985 இல் உள்நாட்டுக் குழப்பங்களின்போது இன்றியமையாத பண்டங்களின் திறமையான பகிர்ந்தளிப்புக்கள் அவசியமானதாக விளங்கியவேளையில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது.

சுற்றுலா

1985 இல் சுற்றுலாக் கைத்தொழில் நடவடிக்கைகளின் மட்டம் மேலும் வீழ்ச்சியடைந்தது. முன்னைய நிலையை அடையும் நோக்கில் ஊக்கமளிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் சுற்றுலாப் பயணி வருகைகளின் எண்ணிக்கை, சுற்றுலாப் பயணி இரவுகளின் எண்ணிக்கை, அறையில் தங்குதல், செலாவணி வருவாய்கள் போன்ற முக்கிய குறிகாட்டிகள் இக்கைத்தொழிற் செயற்பாட்டின் வீழ்ச்சியைத் தெளிவுபடுத்தின. முக்கிய சந்தைகளில் பாதுகாப்பு நிலைமைக்கு எதிரான விளம்பரம் ஏமாற்றம் தரும் செயலாற்றத்துக்குப் பெருமளவுக்குக் காரணமாக இருக்கலாம்.

அட்டவணை 1.31

சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1984 – 1985

| விடயம் | 1984 | % மாற்றம் 1983 மேல் | 1985(அ) | 1984 இற்குமேல் % மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் .. | 317,734 | – 5.9 | 257,456 | – 18.9 |
| 2. இன்பப் பயணிகளின் வருகைகள் .. | 8,599 | 19.8 | 9,882 | 14.9 |
| 3. பயணி இரவுகள் ('000) .. | 2,819 | – 11.3 | 2,369 | – 15.9 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | |
| 4.1 ரூபா பத்து இலட்சங்களில் .. | 2,737.8 | – 5.5 | 2,239.3(அ) | – 18.2 |
| 4.2 டொலர் பத்து இலட்சம் ... | 107.6 | – 15.2 | 82.4 | – 23.4 |
| 4.3 சி.எ.உ. பத்து இலட்சம் ... | 105.0 | – 8.8 | 81.0 | – 22.9 |
| 5. நோக்கங்களின்படியான வரவுகளின் எண்ணிக்கை | | | | |
| 5.1 களியாட்டம் ... | 300,336 | – 2.1 | 234,038 | – 22.0 |
| 5.2 வியாபாரம் தொடர்பான ... | 10,934 | – 43.6 | 18,214 | 66.5 |
| 6. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா ... | 191,070 | 8.4 | 153,142 | – 19.8 |
| 6.2 ஆசியா ... | 89,736 | – 28.0 | 78,666 | – 12.3 |
| 6.3 வட அமெரிக்கா ... | 15,020 | 2.3 | 10,922 | – 27.2 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... | 59,463 | 10.0 | 60,000(அ) | 0.9 |
| 7.1 நேரடியாக ... | 24,595 | 9.9 | 24.840 | 1.0 |
| 7.2 மறைமுகமாக ... | 34,868 | 11.6 | 35,160 | 0.8 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை சுற்றுலாச் சபை..

சுற்றுலாப் பயணிகளின் வருகை 1985 இல் 257,456 ஆக விளங்கி, 1982 இன் மட்டத்தினைவிட 37 சதவீதம் குறைவானதாகவும் 1984 இன் மட்டத்தினைவிட 19 சதவீதம் (317,734) குறைவானதாகவும் காணப்பட்டது. கிழக்காசியாவிலிருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் 5 சதவீத மிதமான அதிகரிப்பு தவிர எல்லாப் பிரதேசங்களினதும் வருகைகள் கணிசமான வீழ்ச்சிகளைக் காட்டுகின்றன. யப்பானிலிருந்தான வருகைகள் 1984இன் 20,600 இலிருந்து 1985இல் 23,356 இற்கு 13 சதவீதத்தால் அதிகரித்தமையே கிழக்காசியாவின் வருகைகளின் அதிகரிப்புக்கு காரணமாக இருந்தது. இது இப் பிராந்தியத்திலிருந்தான ஏனைய நாட்டு வருகைகளின் வீழ்ச்சியை ஈடு செய்வதற்குப் போதுமானதாகும். இலங்கையின் முதன்மைச் சந்தையாக விளங்கும் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகள் வருகைகள் 1984 இன் 191,070 இலிருந்து 1985 இல் 153,004 இற்கு 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதேபோல ஏனைய பிரதேசங்களிலிருந்தான வருகைகள் அவையாவன தெற்காசியா (10,358), வட அமெரிக்கா (41,052) ஆகியன முறையே 24 சதவீத, 31 சதவீத வீழ்ச்சிகளை எடுத்துக் காட்டின.

நாட்டில் நிலவும் தீர்க்கப்படாத சூழ்நிலைகளின் முக்கிய காரணமாக ''எண்பதுகளின்'' தொடக்கத்தில் நீண்ட காலமாகக் காணப்பட்ட பொருளாதார மந்தத்திலிருந்து படிப்படியாக மீட்சியடைந்துவரும் மேற்கு ஐரோப்பாவிலிருந்து உருவாகின்ற சுற்றுலா வருகையின் வளர்ச்சியிலிருந்து கிடைத்த நன்மைகளை இலங்கை பெறத் தவறியமையைக் குறைந்தமட்ட வருகைகள் எடுத்துக் காட்டின். மாறாக, இன்பப் பயணிகளின் வருகை அதாவது 24 மணித்தியாலங்களுக்கும் குறைவாக நாட்டில் தங்கியிருக்கும் தற்காலிக சுற்றுலாப் பயணிகள் (மாறிச் செல்லும் பயணிகள் நீங்கலாக) எண்ணிக்கை 1985 இல் 9,882 ஆக அமைந்து கடந்த ஆண்டின் வருகையைவிட 14 சதவீதம் அதிகமானதாக இருந்தது.

மொத்தச் சுற்றுலா இரவுகள் (அதாவது சுற்றுலாப் பயணிகளினுல் செல விடப்பட்ட இரவுகளின் எண்ணிக்கை) 1985 இல் 2,365,262 ஆக விளங்கி முன்னைய ஆண்டின் மட்டத்தினைவிட 16 சதவீத குறைவினைக் காட்டின. சுற்றுலாப் பயணிகளின் தங்கியிருந்த சராசரிக் காலம் முன்னைய ஆண்டினைப்போன்றே 1985 இலும் 9 இரவுகளாகக் காணப்பட்டது.

சுற்றுலா வருகைகளில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் இலங்கையின் முதன்மைச் சந்தையாக மேற்கு ஐரோப்பா தொடர்ந்தும் விளங்கி 1985 இன் மொத்த வருகைகளில் 59 சதவீதத்திற்கு வகை கூறியது. எனினும் இது கடந்த ஆண்டில் காணப்பட்ட மட்டத்தினைவிட ஒரு சதவீதப் புள்ளியினைக் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியது. இரண்டாவது பெருஞ் சந்தையான ஆசியச் சந்தையின் பங்கு கிழக்காசிய பிரதேசத்திலிருந்தான அதிகரித்த வருகைகளின் காரணமாக முன்னைய ஆண்டின் 29 சதவீதத்திலிருந்து நடைமுறை ஆண்டில் 31 சதவீதத்திற்கு அதிகரித்தது. வட அமெரிக்கா, அவுத்திரலாசியா ஆகியவற்றின் சந்தைப் பங்குகளும் சிறிதளவால் வீழ்ச்சியுற்றன.

இலங்கைச் சுற்றுலாச் சபையின்படி 1985 இல் சுற்றுலாக் கைத்தொழிலிலிருந்தான மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூ. 22,390 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டதுடன் இது கடந்த ஆண்டின் வருவாய்களிலும் பார்க்க 18 சதவீதம் குறைவானதாகும். மொத்த வருவாய்கள் சிஎஉ 810 இலட்சங்களாக அமைந்து சிஎஉ நியதிகளில் 23 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தன.

சுற்றுலாப் பயணிகளின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வொன்று, களியாட்டமே தொடர்ந்தும் மிக முக்கிய முனைப்புப் பெற்று விளங்கியமையையும், 1984 இன் 95 சதவீதத்திலிருந்த அதன் பங்கு வீழ்ச்சியடைந்தபோதும் 1985 இல் மொத்த வருகைகளில் 89 சதவீதத்திற்கு வகை கூறியமையையும் எடுத்துக் காட்டியது. மாறாக ''வியாபார'' நோக்கங்களுக்கான வருகைகளின் பங்கு 1984 இன் 3 சதவீத மட்டத்திலிருந்து நடைமுறையாண்டில் 7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

சுற்றுலாக் கைத்தொழிலின் குறைந்த மட்ட நடவடிக்கைகள் ஏறத்தாழ 60,000 ஆட்களைக் கொண்ட சுற்றுலாத்துறையின் தொழில் மட்டத்தில் நடைமுறையில் காணப்பட்ட மந்த நிலைமையின் மூலம் மேலும் தெளிவாயிற்று.

தரப்படுத்தப்பட்ட தங்குமிட வகையின் இயலளவு 1984 இன் 146 அலகு களிலிருந்து 1985 இல் 143 அலகுகளுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி 1974—1984 காலப்பகுதியின் தொடர்ச்சியான அதிகரித்த 9 சதவீத அதிகரிப் புடன் ஒப்பிடத்தக்கதாகும். எனினும் தரப்படுத்தப்பட்ட தங்குமிட வகையில் அறைகளின் மொத்த எண்ணிக்கை 1984 இல் 9,627 இலிருந்து 1985 இல் 9,826 இற்கு அதிகரித்தது. சுற்றுலா வருகைகள், சுற்றுலா இரவுகள் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சி தரப்படுத்தப்பட்ட சுற்றுலா விடுதிகளில் அறைகளில் தங்கி யிருப்போரின் சராசரி முன்னைய ஆண்டின் 36 சதவீதத்திலிருந்து நடைமுறை யாண்டில் 33 சதவீதத்திற்கு வீழ்ச்சியை விளைவித்தது. துணைத் தங்குமிட வகை களில் கிடைக்கத்தக்க அறைகளின் மொத்த எண்ணிக்கை 1984 இல் 1,270 இலிருந்து நடைமுறையாண்டில் 1,308 இற்குச் சிறிதளவால் அதிகரித்தது. சுற்றுலாப் பயணிகள் குறுங்காலத்திற்கே தங்கியமை, வருகைகளின் குறைந்த மட்டம் என்பனவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் துணைத் தங்குமிடத்துறையின் அறையில் தங்கியமையும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது.

தரப்படுத்தப்பட்ட தங்குமிடத்துறையில் அறையில் தங்கியோரின் பிரதேச வாரியான பகுப்பின்படி, கொழும்பு நகரம் மற்றும் கொழும்பு பெரும்பாகப் பகுதியினது வீதங்கள் முறையே 38 சதவீதமாகவும், 35 சதவீதமாகவும் விளங்கி 1984 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 7 சதவீத, 3 சதவீத புள்ளிகள் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக் காட்டின. தென் கரையோரத்தைப் பொறுத்த வரை கடந்த ஆண்டினைப்போன்று 34 சதவீதத்தைக் கொண்டிருந்தவேளையில் மலைநாடு, மற்றும் புராதன நகரப் பகுதிகளின் தங்கியிருப்போர் வீதம் 1984 இன் 32 சதவீத, 31 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் முறையே 28 சதவீதத்திற்கும், 27 சதவீதத்திற்கும் குறைவடைந்தமையினால் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.